தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D., FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-7-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலைக்கழக 49வது நிறுவன நாள் விழா மற்றும் தொலைநிலைக்கல்வி பட்டத்தகுதி பெறும் விழா**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 48வது நிறுவன நாள் மற்றும் தொலைதூரக் கல்வி பட்டத்தகுதி பெறும் விழா பட்டமளிப்பு விழா அரங்கில் இன்று (1-7-2019) நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அ.சு.கிருட்டிணமூர்த்தி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பின்னர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இயக்குனர் முனைவர். ஆனந்தன் அவர்கள், பண்ணை பட்டயப் படிப்பு குறித்து விளக்கினார். மூன்று வருடப் படிப்பானது 6 பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 600 விவசாயிகள் மற்றும் பயனாளிகள் இப்பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

சிறப்பு முகவுரை ஆற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார் விவசாயப் பெருமக்களின் தொழில்நுட்ப ஆர்வத்தைப் பாராட்டினார்.

விழாப் பேருரை நிகழ்த்திய புதுதில்லி, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், தேசிய மானாவாரி விளைநிலப் பகுதி ஆணைய தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அசோக் தல்வாய் இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நாட்டிலேயே மற்ற வேளாண்மை நிறுவனங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றார்.

விழாவின் ஒரு பகுதியாக, வேளாண் பல்கலைக்கழகத்திற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் கோவை மேற்கு மண்டல தலைமை அஞ்சல் நிலைய அதிகாரி திருமதி. ஷூலி பர்மன் இ.அ.ப., அவர்கள் சிறப்பு தபால் உறையினை வெளியிட வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார் அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும், லாலி ரோடு தபால் அலுவலகத்தின் சிறப்பினை பாராட்டும் விதமாகவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பெருமையை நிலைநாட்டவும் அஞ்சல் தலையை ரத்து செய்யும் முத்திரையையும் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், 25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற சேவையாற்றிய பல்கலைக்கழக பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், 20 மற்றும் 10 வருடங்களுக்கு மேலாக திறம்பட பணியாற்றிய ஓட்டுனர்கள் கௌரவிக்கப்பட்டனர். வேளாண் பண்ணை இளநிலை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு பயின்ற 57 விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

சிறந்த ஆராய்ச்சியாளர், சிறந்த ஆசிரியர், சிறந்த வேளாண் விரிவாக்க அலுவலர், சிறந்த பெண் விஞ்ஞானி, சிறந்த வேளாண் அறிவியல் நிலையங்கள், சிறந்த நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர், நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர் மாணவ – மாணவிகள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

விழா நிறைவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் சுப்பிரமணியம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்